



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.12.2025) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில் பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.12.2025) திருநெல்வேலி சுற்றுலா மாளிகையில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திருமதி விஜிலா சத்யானந்த் , அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகள் டாக்டர் ஜானகி ரத்னா ஷோன், மருமகன் சாமுவேல் ஆகியோருடன் சந்தித்து, வாழ்த்து பெற்றனர். உடன், அமைச்சர் கே.என்.நேரு மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.12.2025) சென்னையில் நடைபெற்ற விஜிபி குழுமத்தின் இயக்குநர் விஜிபி. பாபுதாஸ் அவர்களின் மகன் விஜிபி. சுரோஜித் பாபுதாஸ் ஐஸ்வர்யா ரவிச்சந்திரன் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். உடன், அமைச்சர் மா.சுப்பிரமணியன், விஜிபி குழுமத்தின் தலைவர் டாக்டர் வி.ஜி.சந்தோசம் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் – தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்

# ‘சொல் புதிது’ திட்டத்தின் 8வது கூட்டம்!

## தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் – முனைவர் ம.இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, டிச. 22-

தமிழ்நாடு முதல்வர் அவர்கள் வழங்கிய நிதி உதவியில் செயற்படும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சொல் புதிது திட்டத்தின் எட்டாவது கூட்டம் சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர், முனைவர் ம. இராசேந்திரன் தலைமை வகித்தார். பேராசிரியர்கள் வ. ஜெயதேவன், மு. இராமசாமி, ஒப்பிலா மதிவாணன்,

பாரதிபாலன், சா. சரவணன், ம. இளங்கோவன், பூண்டிக் கல்லூரி முன்னாள் முதல்வர் உரு. இராசேந்திரன், மற்றும் திருமதி வாசுகி கண்ணப்பன், நீரை மகேந்திரன், ராஜ் கண்ணன், மு. முருகேசன், ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் பின்வரும் 32 ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழ்ச்சொற்கள் இறுதி செய்யப் பெற்றன.

ஆங்கிலம் , இறுதி செய்யப் பட்டவை விவரம் வருமாறு:-

Life writing - வாழ்வெழுத்து, Poop suitcase - மனிதக் கழிவுப் பெட்டி, Fibonacci day - ஃபிபோனஸ்ஸி நாள், Culpable homicide - நோக்கமிலாக் கொலை, Rage bait - கெடு உணர்வுத் தூண்டி, Reps - மீள் பயிற்சி, Microgreens - நுண்ணுயிர்ப் பயிர், Quandary - ஊசலாட்டம், Conundrum - பெருஞ்சிக்கல், Strong room - காப்பறை, Collogen - தசை வலுவூட்டி / தசை நார் வலுவூட்டி, Match fixing - ஆட்டச் சூது, Sky ball - மீவுயர் பந்து, Skyfall - பெருவீழ்ச்சி, Yorker - குறிவீச்சுப் பந்து, Abnegation - தன்னல நீக்கம், Athleisure - விளையாட்டுப் பாணி உடை, Facetious - பொருந்தா நகை, Iconoclast - கலகக்காரர், Physical flashcard - விளக்க அச்சு அட்டை, Digital flashcard - விளக்க மின் அட்டை, Gigil - பேருணர்வு, Alamak - ஐயோ, Yoh - ஓ, Ludraman - மட்டி, Tumbleweed மரக்கட்டை, Hidden gem - மறைமணி, Dowdy - ஈர்ப்பற்ற, Kidult - முதுகுழவி, Hangxiety - போதைப் பின்பதற்றம், Promptcraft - கட்டளைத் திறன், Situationship - உறவு மயக்கம்

இவ்வாறு தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.61, எழும்பூர், டாக்டர் சந்தோஷ் நகர் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு வளாகத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 1.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அங்கான்வாடி மையம், உடற்பயிற்சிக் கூடம் மற்றும் செயற்கை புல்தரை ஆடுகளம் கட்டும் மூன்று திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.


